DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 24 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. பரமசிவம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of December 2024.

**(A1, A2, A4 absent. Petition filed and allowed. A3, A5 present.)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் அச்சன்புதூரில் வசித்து வருகிறேன். சென்ட்ரிங் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. ஆஜர் இல்லாத எதிரிகள் சாமித்துரை, ஐயப்பன், முத்துராஜ் ஆகியோரையும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ராமர் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அந்த கையெழுத்தை எங்கு வைத்து எதற்காக போட்டேன் என்பது எனக்கு தற்போது நினைவில்லை. போலீசார் என்னை

விசாரிக்கவில்லை. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 19** ஆகும்.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, நான் கடந்த 07.09.2015 ஆம் தேதி மாலை 05.30 மணியளவில் அச்சன்புதூர் காவல்நிலையம் சென்றிருந்தபோது, அங்கிருந்த போலீசாரிடம் இவ்வழக்கின் எதிரி ராமர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும் முருகன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 25<br>Defence<br>Court |
| Name | : | திரு. குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of December 2024.

**(A1, A2, A4 absent. Petition filed and allowed. A3, A5 present.)**

**முதல் விசாரணை**

நான் நெடுவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். கடந்த 13.08.2015 ஆம் தேதி நான் செங்கோட்டையில் உள்ள ஒரு டீக்கடை அருகே நின்றுகொண்டிருந்தபோது, போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்படி கையெழுத்தை போட்டுக்கொடுத்தேன். அதிலுள்ள விவரங்கள் என்ன என்று எனக்கு

தெரியாது. **பார்வை மகசரில் உள்ள எனது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 20** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 13.08.2015 ஆம் தேதி இரவு 12.20 மணியளவில் இவ்வழக்கின் சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் சாமித்துரை என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi